**செருக்குஞ் சினமும் சிறுமையும் இல்லார்**
**பெருக்கம் பெருமித நீர்த்து. (குறள்.எண்.431)**

**பொருள்:** கர்வம், சினம், அற்ப எண்ணம் இல்லாதவருடைய முன்னேற்றமே சிறந்தது.

## பழனி நகராட்சி

2018–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20–ம் நாள். திங்கள்கிழமை காலை 10.00 மணியளவில் பழனி நகராட்சியில் சாதாரணக் கூட்டம் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெறும்.

நகராட்சி அலுவலகம், பழனி
நாள். 20–08–2018

தனி அலுவலர்
பழனி நகராட்சி

## கூட்டப்பொருள்

**1.** பழநி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 33 வரை உள்ள வீடுகளில் சேகரம் ஆகும் திடக்கழிவுகளை சேகரம் செய்ய உரக்கிடங்கில் அமைய உள்ள நுண் உரம் தயார் செய்யும் நிலையத்திற்கு கொண்டு சென்று உரமாக்க சேகரிப்பு மையத்தில் இருந்து 400 வீடுகள் வரை தொலைவில் உள்ள பகுதிக்கு வீடு வீடாக திடக்கழிவு சேகரிக்க மின்கலத்தால் இயங்கும் நான்கு சக்கர வாகனம் (BOV) 20 எண்கள் ரூ. 36.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கி பயன்படுத்தவும். நுண் உரமாக்கும் மையத்தில் இருந்து 400 வீடுகளுக்கு மேல் தொலைவில் உள்ள பகுதிகளில் வீடு வீடாக சேகரிக்க சிறு சுமை சுமக்கும் நான்கு சக்கர தானியங்கி வாகனம் (LCV) 5 எண்கள் ரூ. 28.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கி பயன்படுத்தவும். 13.08.2018ல் நடைபெற்ற மாநில உயர்மட்ட அதிகார குழுக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. நிகர மதிப்பீடு ரூ.64.00 இலட்சத்திற்கு ( 36.00 + 28.00 ) தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :** மேற்கண்டவாறு ஒதுக்கீடு செய்து வரப்பெற்ற திட்ட மதிப்பீட்டின்படி பணியினை செயல்படுத்த உரிய நிர்வாக அனுமதி மற்றும் நிதியினை விடுவிக்கக் கோரியும் , வாகனங்கள் வாங்கி திடக்கழிவுகள் முழுமையாக அப்புறப்படுத்தவும், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப நிர்வாக அனுமதி மற்றும் நிதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** பழநி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 1 முதல் 33 வரை வார்டுகளில் இருந்து வீடு வீடாக சென்று சேகரம் செய்யும் திடக் கழிவுகள் பழநி நகராட்சி பெரியப்பா நகர்ப்பகுதியில் 24 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உரக்கிடங்கு வளாகத்தில் 1949–ம் ஆண்டு முதல் கொட்டப்பட்டு சேர்ந்துள்ள பழமையான திடக்கழிவுகள் 90,000 க.மீ அளவிற்கு தேங்கியுள்ளதை தரம்பிரித்து அப்புறப்படுத்தி இடத்தினை சுத்தம் செய்ய Bio mining முறையில் சென்னையில் மாநில உயர்மட்ட அதிகாரக்குழுக் கூட்டம் ( SHPC ) 13.08.2018–ல் நடைபெற்றதில் ரூ. 592.00 இலட்சம் மதிப்பீட்டு தொகைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்க்கான மதிப்பீடு ரூ. 592.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் தேங்கி உள்ள 90,000 க.மீ திடக்கழிவுகள் தரம் பிரித்து அப்புறப்படுத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 592.00 இலட்சத்திற்கும் உரிய நிதி விடுவிக்கவும், நிர்வாக அனுமதி வழங்கவேண்டியும் பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் சென்னைக்கு அனுப்பி அனுமதி பெற மன்றம் அனுமதிக்கலாம்.

**3.** நகராட்சி பொறியர் பிரிவு ஈப்பு எண். TN 57 AT 3258–க்கு முன்புறம் உள்ள பால் ஜாயிண்டுகள் 4 செட்டுகள் புதிதாக மாற்றி அமைக்க அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் செலவினம் ரூ.7182/– ஐ மேற்கொள்ளவும் TVS நிறுவனம் மதுரை பழனி கிளைக்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

தனி அலுவலர் முன் அனுமதியுடன் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**4.** பழனி நகராட்சிக்குச் சொந்தமான குத்தகை இனங்களுடன் சேவைவரி செலுத்தப்படுவது சம்மந்தமாக (அசையாசொத்து) மத்திய கலால் மற்றும் சேவைவரி/சென்னை அவர்களின் மேல் முறையீட்டு எண்.ST/42345/2013-DB-ல் tribunal வழக்கு தொடரப்பட்டது பழனி நகராட்சி சார்பாக RA அசோசியேட்ஸ், கோயமுத்தூர் அவர்கள் மூலம் 19.07.2018 அன்று வழக்கில் ஆஜராக்கப்பட்டு, வழக்கு தள்ளுபடி செய்து முடிவுற்றது. உச்ச நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்புரைக்கு கட்டுப்பட்டு, தற்பொழுது புள்ளி விபரத்திற்கான தொகையிலிருந்து தள்ளுபடி செய்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகிய திரு. R.A. அசோசியேட்ஸ், கோயமுத்தூர் அவர்களுக்கு ஆலோசனைக் கட்டணம் மற்றும் இதர செலவினம் தொகை ரூ.23,600/–ஐ வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.5230/2011/அ1)

**5.** பழநி நகராட்சியில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை பணிக்காக 66 DBC (Domestic Breeding Cheekers) பணியாளர்களை தனியார் ஒப்பந்தப்புள்ளி மூலம் நிரப்பிக்கொள்ளும் பணிக்காக 03–08–2018–ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்காணும் ஐந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு விலை விகிதம் ரூ. |
|---|---|---|
| 1 | Excel Neat and Tidy Agency, Ghanthi Nagar, 1st St, R.M. Colony, Dindigul | 370/- |
| 2 | Relyon Facility Services PVT.LTd, 142, 5th Cross St, Sri Sai Nagar, Okkiam Thoraippakkam, Chennai – 97. | 368/- |
| 3 | Paramount Hospitality Service. 31, West Masi Street, Madurai – 01. | 367/- |
| 4 | S.S. Engineerrs, Builders & Contractor, 3/6, Kamadenu Nagar, Vadavalli. Bharathiar University (Post) Coimbatore - 46 | – |
| 5 | Honest Security Agency, 100 ATR Building, Pollachi Road, Udumalaipet. | – |

மேற்காணும் ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.5–ல் காணும் ஒப்பந்தப்புள்ளிக்கு தொழில்நுட்ப தகுதி இல்லாததால் Honest Security Agency, உடுமலை கம்பெனியின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டு மீதமுள்ள ஒன்று முதல் நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் (Price Bid) விலை விகித ஒப்பந்தப்புள்ளி 14–08–2018–ம் தேதி காலை 11.00 மணிக்கு திறக்க அறிவிப்பு நான்கு கம்பெனிகளுக்கு அனுப்பப்பட்டு மேற்படி கம்பெனி நிர்வாகிகளும் வருகை புரிந்தனர்.

மேலே கண்டுள்ள நான்கு நிறுவனங்களில் வ.எண்.4–ல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனம் வழங்கிய விலைப்புள்ளி ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்த நிபந்தனை எண்.11–ன்படி, நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு விலை விகிதத்தை குறிப்பிடப்படாததால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி நிராக்கரிக்கப்பட்டு மீதமுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் பாராமவுண்ட் ஹாஸ்பிடாலிட்டி சர்வீஸ், மதுரை வ.எண்.3–ல் காணும் நிறுவனம் கொடுத்துக்கொண்ட ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் குறைவாக உள்ளதால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று இப்பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளில் Honest Security Agency, உடுமலை நிறுவனம் வழங்கிய ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி பெறாததால் நிராகக்கப்பட்டதை ஏற்கலாம்.
2. மீதமுள்ள நான்கு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிகளில் S.S. Engineerrs, பில்டர்ஸ் & காண்ட்ரக்டர்ஸ், கோயமுத்தூர் நிறுவனம் சமர்பித்த ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்த நிபந்தனைகள் வ.எண்.11–ன்படி, நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு விலை விகிதம் குறிப்பிடப்படாததால் மேற்படி நிறுவன ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்க இயலாததால் நிராகரிக்கப்பட்டதை ஏற்கலாம்.
3. மீதமுள்ள மூன்று நிறுவனங்களில் பாராமவுண்ட் ஹாஸ்பிடாலிட்டி சர்வீஸ், மதுரை கொடுத்துக்கொண்ட விலை விகிதம் குறைவாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று இப்பணியினை மேற்கொள்ளலாம்.
4. மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதையும் அங்கீகரிக்கலாம்.

**6.** தமிழ்நாடு முழுவதும் நகராட்சிகளில் 01.04.2018 முதல்தமிழ்நாடுநகராட்சிகள்சட்டம் 1920ன்படி சொத்துவரி திருத்தம் மேற்கொள்ள தெரிவித்து வரப்பெற்ற அரசாணை (பல்வகை) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19.07.2018 ஐ மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

அரசாணையின்படிகீழ்க்கண்டவாறுசொத்துவரிசீராய்வுசெய்யப்படஉள்ளது.

| வ.எண். | விபரம் | சொத்துவரிசீராய்வு |
|---|---|---|
| 1 | குடியிருப்பு 3கட்டிடம் | அதிகபட்சம் 50 சதவீதம் |
| 2 | வாடகைகுடியிருப்பு கட்டிடம் | அதிகபட்சம் 100 சதவீதம் |
| 3 | குடியிருப்புஅல்லாத கட்டிடம் | அதிகபட்சம் 100 சதவீதம் |

**அலுவலகக்குறிப்பு.**

1. பதிவுசெய்யலாம்.
2. அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் பிறப்பிக்கப்படும் வழிமுறைகளின் படி 01.04.2018 முதல் சொத்துவரி திருத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
3. சொத்துவரிதிருத்தம் குறித்து மேற்கொள்ளப்பட வேண்டிய அவரச அத்தியாவசிய செலவினங்களை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

நாள்.19.07.2018–ல் வாடகை குடியிருப்பு கட்டிடம் என்ற கலம் அரசு ஆணை எண்.36 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018–ல் நீக்கம் செய்யப்பட்டு வரப்பெற்றுள்ளதை பதிவு செய்யலாம்.

**7.** சொத்து வரி திருத்தம் குறித்து வெளியிடப்பட்ட அரசாணை (பல்வகை) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018–க்கு திருத்தம் செய்து வரப்பெற்ற அரசாணை (பல்வகை) எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018–ஐ மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விபரம் | சொத்து வரி சீராய்வு |
|---|---|---|
| 1 | குடியிருப்பு கட்டிடம் | அதிகபட்சம் 50 சதவீதம் |
| 2 | குடியிருப்பு அல்லாத கட்டிடம் | அதிகபட்சம் 100 சதவீதம் |

**அலுவலகக்குறிப்பு.**

1) பதிவு செய்யலாம்.
2) ஆரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் பிறப்பிக்கப்படும் வழிமுறைகளின்படி 01.04.2018 முதல் சொத்துவரி திருத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

அரசாணை (பல்வகை) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,

**8.** பழனி நகராட்சியின் ஆண்டு குத்தகை இனமான, ஆண்டவன் பூங்கா ரோடு (தேவர் சிலை அருகில்) கட்டண கழிப்பிடம் மற்றும் குளியலறை தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 11–வது முறையாக கோரப்பட்டும், ஏலம் ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்ள எவரும் முன்வரவில்லை. இது குறித்து ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி குத்தகை இனத்தின் வைப்புத் தொகை ரூ.4,00,000/–க்கு நிர்ணயம் செய்யப்பட்டதை அதிகமாக உள்ளதை குறைக்க தெரிவிக்கப்பட்டதன் படி வைப்புத் தொகை ரூ.2,00,000/–க்கு நிர்ணயம் செய்வதற்கும் தொடர் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டும் மன்றம் பொருள் ஏற்பது குறித்து மன்றம் பரிசீலனை செய்யலாம்.

**அலுவலகக்குறிப்பு:** அனுமதிக்கலாம். (ந.க.எண்.4281/2017/அ1)

**9.** பழநி நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN 57 AX 8884 கழிவுநீர் உறிஞ்சும் வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற மராமத்து பணிகள் மேற்க்கொள்ள 31–07–2018–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | J.D & Co.,<br>160, Coimbatore Road,<br>Pollachi – 642 002. | 74,900/- |
| 2 | P.B.Sheriff Auto Diesel Works,<br>25/67, A.B.T. Road,<br>Pollachi – 624 001. | 84,000/- |

மேற்க்கண்டுள்ளவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

எனவே, குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள J.D & Co., 160, Coimbatore Road, Pollachi என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள தொடர் நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கு தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தில் பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

பொது சுகாதார நலன் கருதி அவசரம் அவசியம் முன்னிட்டு மதிப்பீட்டை விட குறைவாக வழங்கியுள்ள J.D & Co., 160, Coimbatore Road, Pollachi என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்க்கொண்டதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**10.** பழநி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு TN 57 AT 6977 கழிவுநீர் வாகனத்திற்கு தகுதிச்சான்று காலம் 27–07–2018–ம் தேதியுடன் முடிவடைவதால் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் 2018–2019–ம் ஆண்டிற்கான தகுதிச்சான்று பெறுவதற்கு, வாகனத்தினை மராமத்து பணிகள் மேற்கொண்டு வர்ணம் பூசும் பணிக்குண்டான ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர்நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.70,000/– மற்றும் நிர்வாக செலவினம் ரூ.4,000/– ஆகமொத்தம் ரூ.74,000/– (எழுபத்து நான்காயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு கூட்டத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3351/2018/எச்2)

**11.** பழநி நகராட்சியில் துப்புரவு பணியாளராகப் பணிபுரிந்து பணியிடையே 16–03–2016–ல் இறந்த திருமதி.அக்கம்மாள்/கருப்பன், என்பரின் வாரிசுதாரர் (ம) மகனுமான திரு.முருகானந்தம் என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க கோரி சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக் கிளையில் வழக்கு தொடர்ந்ததன் அடிப்படையில், தற்போது பழநி நகராட்சியின் சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.P.ஸ்ரீநிவாஸ் அவர்களால் சென்னை உயர்நீதி மன்ற மதுரைக்கிளையில் மேல்முறையீடு வழக்கு தொடரப்பட்டுள்ளது (வழக்கு எண். WP(MD)No.1020/2018)

எனவே, நகராட்சி வழக்கறிஞர் திரு.P.ஸ்ரீநிவாஸ் அவர்களுக்கு வழக்கு கட்டணம் மற்றும் வழக்காடு கட்டணம் தொகை ரூ.20000/– வழங்கவும் உரிய மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> அனுமதிக்கலாம். (ந.க.எண்.1218/2012/எச்2)

**12.** பழநி நகராட்சி பொது சுகாதாரம் – அடிவாரம் பகுதிகளில் பிரிவு – Iக்கு உட்பட்ட பகுதிகளில் கார்த்திகை தீபத் திருவிழா தொடர்ந்து – ஐயப்ப சீசன் – முன்னேற்பாடுகள் நடவடிக்கை தொடர்பாக.

பழநி நகராட்சி பொது சுகாதாரம் அடிவாரம் பகுதி பிரிவு – Iக்கு உட்பட்ட பகுதிகளில் 17.11.2018 முதல் 14.01.2019 வரை 59 நாட்களுக்கு தொடர்ந்து கார்த்திகை, மார்கழி மாத பஜனை மற்றும் தீபத் திருவிழா நடைபெறுவதால் அடிவாரம் பகுதிகள், பொது மக்கள் மற்றும் பாதயாத்தீரிகர்கள், பக்தர்கள், பல்வேறு மாவட்ட மற்றும் வெளி மாநில பக்தர்கள் தினசரி சுமார் 1 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் வருகை புரிவார்கள். எனவே, திருவிழா காலங்களில் பொது சுகாதார நலன் காக்க, பொது சுகாதார அவசியம் அவசரம் கருதி அதற்குண்டான முன்னேற்பாடுகள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

| வ. எண். | முன்னேற்பாடுகள் வேலை விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | 2 எண்ணிக்கை தானியங்கி டிராக்டர் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனம் மூலம் 17.11.2018 முதல் 14.01.2019 வரை 59 நாட்களுக்கு விலைப்புள்ளி விபரப்படி நாள் ஒன்றுக்கு ரூ.2000/– வீதம் (2 x 59 x 2000 ) | 2,36,000/– |
| 2 | கிருமி நாசினியான நீர்த்த சுண்ணாம்புத்துள் அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனம் மூலம் விலைப்புள்ளி விபரப்படி 15000 kg, 15 டன் கிலோ ஒன்றுக்கு ரூ.15/– வீதம் (1 x 15 x 5000 kg ) | 2,25,000/– |
| 2 | கிருமி நாசினியான பிளிச்சிங் பவுடர் (Grade – I 33%) அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனம் மூலம் விலைப்புள்ளி விபரப்படி 6000 kg, 6 டன் கிலோ ஒன்றுக்கு ரூ.40/– வீதம் (1 x 40 x 5000 kg ) | 2,40,000/– |
| மொத்தம் | | 7,01,000/– |
| வரி – 2%) | | 14020/– |
| | | 715020/– |

எனவே மேற்படி தொகை ரூ.715020/ஐ (ஏழு இலட்சத்து பதினைந்தாயிரத்து இருபது மட்டும்) செலவினங்கள் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நடைபெறவும் முன்னேற்பாடு நடவடிக்கைகள் நடைபெற ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டி கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி மேற்படி செலவினங்களை அனுமதிக்கலாம். (ந.க.எண்.4302/2018/எச்2)

**13.** பழனி நகராட்சி பகுதியில் அனைத்து துறையில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் தனியார் தொழில் சார்ந்த கட்டிடங்களுக்கும் மற்றும் அனைத்து வணிகர்களும் தொழில் முனைவோர்களுக்கும் அசராணையின்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.12503/2018/ஆர்1, நாள்.21.05.2018–ன் சுற்றிக்கையின்படி தொழில்வரி சீராய்வு செய்ய தெரிவிக்கபட்டுள்ளது. மேற்படி, சீராய்வு அரையாண்டு தொழில் வரி தொகையும் 01.10.2018 முதல் 25 % சதவீதம் உயர்வு செய்ய தீர்மானிக்கப்பட்டு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது (தீர்மான எண்.518, நாள்.15.06.2018)

மேற்கண்ட தொழில் வரி சீராய்வு சம்பந்தமாக விளம்பரம் செய்தமைக்கு மக்கள் செய்தி தொடர்பு அலுவலர் வெளியீட்டு ஆணை எண்.143, விளம்பரம் நாள்.19.06.2018 அன்று திசங்கு நாளிதழ் மூலம் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. விளம்பரத் தொகை ரூ.15,000/–க்கு தனிஅலுவலர், மன்றப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

தொழில்வரி சீராய்வு செய்ய விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ.15,000/– செலவினம் தினசங்கு நாளிதழக்கு வழங்க அவசரம் அவசியம் கருதி அனுமதிக்கலாம். (ந.க.எண். 2645/2018/அ4)

**14.** பழனி நகராட்சி அனுமதியற்ற கட்டுமானம் தொடர்பான ( Flex)விளம்பரத்தை ( Mukil Offset Achagam, 316 A New Dharapuram Road, Palai என்ற நிறுவனத்தார் மூலம், Printing செய்து கொண்டமைக்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 7500/–யை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் அவசர அவசியம் கருதி மேற்படி, பணியை மேற்கொண்டமைக்கும், தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு கூட்டத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

அவசர அவசியம் கருதி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதிக்கலாம் ( ந.க.எண். 1229/18/எப்1)

நகராட்சி அலுவலகம், பழனி
நாள். 20–08–2018

தனி அலுவலர்
பழனி நகராட்சி